**மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயம், திருவாரூர்**

**(தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்)**

**முன்னிலை : திருமதி.Dr.R. லதா, M.A., M.L., Ph.D.,**

**தலைமை நீதித்துறை நடுவர், திருவாரூர்**

**2026 ஆம் ஆண்டு மே மாதம் 04 ஆம் நாள் திங்கள்கிழமை**

**திருவள்ளுவராண்டு 2057, ஸ்ரீ பராபவ வருடம், சித்திரை திங்கள் 21 ஆம் நாள்**

**மோ.வா.வி.இ.கோ.மனு எண்.67/2025**

**(CNR No. TNTV02-002943-2025)**

1) சுதா, வயது.37,
க/பெ.கலைச்செல்வன்,
எண்.2/251 தெற்கு தெரு,
கொத்தவாசல்,
பூந்தோட்டம்,
நன்னிலம் தாலுக்கா & முன்சிபி,
திருவாரூர் மாவட்டம்.

2) மைனர்.கலைப்பிரியன்,வயது.13,
த/பெ.கலைச்செல்வன்,
எண்.2/251 தெற்கு தெரு,
கொத்தவாசல்,
பூந்தோட்டம்,
நன்னிலம் தாலுக்கா & முன்சிபி,
திருவாரூர் மாவட்டம்.

3) மைனர்.சமிக்ஷா,
த/பெ.கலைச்செல்வன்,
எண்.2/251 தெற்கு தெரு,

LATHA Digitally signed by LATHA Date: 2026.05.04 18:27:18 +0530

கொத்தவாசல்,

பூந்தோட்டம்,

நன்னிலம் தாலுக்கா & முன்சிபி,

திருவாரூர் மாவட்டம்.

**(2,3 மைனர் மனுதாரர்களுக்காக**
**அவர்களது தாயாரும், பாதுகாவலருமான**
**1ம் மனுதாரர் சுதா மூலமாக)**

4) தனலெட்சுமி, வயது.60,
க/பெ.பன்னீர்செல்வம்,
தெற்கு தெரு,
கொத்தவாசல்,
பூந்தோட்டம்,
நன்னிலம் தாலுக்கா & முன்சிபி,
திருவாரூர் மாவட்டம். **...மனுதாரர்கள்**

// எதிர் //

1) நந்தினி,
க/பெ.முருகானந்தம்,
எண்.2/259 தெற்கு தெரு,
கொத்தவாசல்,
பூந்தோட்டம்,
நன்னிலம் தாலுக்கா,
திருவாரூர் மாவட்டம்.

2) கிளை மேலாளர்,
நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,
எண்.12 டிஎஸ்ஆர் பெரிய தெரு,

LATHA Digitally signed by LATHA Date: 2026.05.04 18:27:27 +0530

கும்பகோணம்,

தஞ்சாவூர் மாவட்டம். ...**எதிர்மனுதாரர்கள்**

**மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் Tr.CMP.No.264 முதல் 281/2020 மனுக்களில்11/05/2020 தேதியில் பிறப்பித்த தீர்ப்பின் வழிகாட்டுதலின் அடிப்படையில் பிறப்பிக்கப்படும் உத்தரவு படிவம்:**

| | | | |
|---|---|---|---|
| (a) | இழப்பீடு கோருபவரின் பெயர் மற்றும் முகவரி | | 1) சுதா, வயது.37,<br>க/பெ.கலைச்செல்வன்,<br>எண்.2/251 தெற்கு தெரு,<br>கொத்தவாசல்,<br>பூந்தோட்டம்,<br>நன்னிலம் தாலுக்கா & முன்சிபி,<br>திருவாரூர் மாவட்டம்.<br><br>2) மைனர்.கலைப்பிரியன்,வயது.13,<br>த/பெ.கலைச்செல்வன்,<br>எண்.2/251 தெற்கு தெரு,<br>கொத்தவாசல்,<br>பூந்தோட்டம்,<br>நன்னிலம் தாலுக்கா & முன்சிபி,<br>திருவாரூர் மாவட்டம்.<br><br>3) மைனர்.சமிக்ஷா,<br>த/பெ.கலைச்செல்வன்,<br>எண்.2/251 தெற்கு தெரு,<br>கொத்தவாசல்,<br>பூந்தோட்டம், |

LATHA
Digitally signed by LATHA
Date: 2026.05.04 18:27:35 +0530

| | | | |
|---|---|---|---|
| | | | நன்னிலம் தாலுக்கா & முன்சிபி,<br>திருவாரூர் மாவட்டம்.<br><br>4) தனலெட்சுமி, வயது.60,<br>க/பெ.பன்னீர்செல்வம்,<br>தெற்கு தெரு,<br>கொத்தவாசல்,<br>பூந்தோட்டம்,<br>நன்னிலம் தாலுக்கா & முன்சிபி,<br>திருவாரூர் மாவட்டம். |
| (b) | எதிர்மனுதாரர்களின் பெயர் மற்றும் முகவரி | | 1) நந்தினி,<br>க/பெ.முருகானந்தம்,<br>எண்.2/259 தெற்கு தெரு,<br>கொத்தவாசல்,<br>பூந்தோட்டம்,<br>நன்னிலம் தாலுக்கா,<br>திருவாரூர் மாவட்டம்.<br><br>2) கிளை மேலாளர், நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,<br>எண்.12 டிஎஸ்ஆர் பெரிய தெரு,<br>கும்பகோணம்,<br>தஞ்சாவூர் மாவட்டம். |
| (c) | இழப்பீடு கோரிக்கை மனு தாக்கல் செய்த தேதி | - | 13.06.2025 |
| (d) | உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதி | - | **04.05.2026** |

| | | | |
|---|---|---|---|
| (e) | பிறப்பிக்கப்பட்ட இழப்பீட்டு தொகை விபரம் | - | **ரூ.15,00,000/-** |
| (f) | வட்டி விகிதம் | - | 7.5% |
| (g) | எந்த தேதியிலிருந்து வட்டி தொகை செலுத்தப்பட வேண்டும் | - | 13.06.2025 |
| (h) | செலவுத்தொகை ஏதாவது இருப்பின் | | 1) மனு/வழக்குரை நீ.ம. 14,372.50<br>2) வக்காலத்து 10.00<br>3) படி மெமோ 09.00<br>4) வழக்கறிஞர் கட்டணம் 22,000.00<br>5) மொத்தம் 36,391.50<br>**முழுமையாக்கப்பட்ட தொகை** **ரூ.36,392.00** |
| (i) | உத்தரவின்படி இழப்பீட்டு தொகை, வட்டி மற்றும் செலவுத்தொகையை யார் செலுத்த வேண்டும் என்பது சம்பந்தமான விபரம் | | இழப்பீட்டு தொகை **ரூ.15,00,000/-** **2-ஆம்** எதிர்மனுதாரர் வட்டி மற்றும் செலவுத் தொகையுடன் வைப்பீடு செய்ய வேண்டும். |
| j) | மனுவில் பல கோரிக்கையாளர்கள் இருக்கும் பட்சத்தில் ஒவ்வொரு கோருரிமையாளருக்கும் இழப்பீட்டு தொகையில் கிடைக்கத்தக்க பாக விபரம் | - | **1ம் மனுதாரருக்கு ரூ.4,00,000/-மும், 2 ,3 மனுதாரர்களுக்கு தலா ரூ.5,00,000/-மும், 4ம் மனுதாரருக்கு ரூ.1,00,000/-மும் பெற்றுக்கொள்ளவேண்டியது** |

LATHA

Digitally signed by LATHA
Date: 2026.05.04 18:27:49 +0530

| | | | |
|---|---|---|---|
| (k) | இழப்பீட்டு தொகை எதன் மூலமாக எந்த வகையில் செலுத்தப்பட வேண்டும் என்பது சம்பந்தமான விபரம் | | தீர்ப்பாணை தொகையை **ரூ.15,00,000/-ஐ 2ம் எதிர்மனுதாரர்** இந்த மனு தாக்கலான தேதியிலிருந்து முழு தொகை வசூலாகும் வரைக்கும் 7.5% வட்டியுடன் (மனு தரப்பினரின் தள்ளுபடி செய்யப்பட்ட காலம் இருப்பின் அதை தவிர்த்து) செலவுத்தொகையுடன் இந்நீதிமன்ற இத்தீர்ப்பாயத்தின் வங்கிக் கணக்கு எண்ணான ஸ்டேட் பேங்க ஆப் இந்தியா, விளமல் கிளை, திருவாரூர் **கணக்கு எண்.CJMTVR672025NIC, IFSC. SBIN0004266** – என்ற வங்கி கணக்கில் இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்ட ஒரு மாத காலத்திற்குள் செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது. |
| (l) | இழப்பீட்டு தொகை கோருரிமையாளர் எவ்வாறு பெற்றுக் கொள்வது என்பது சம்பந்தமாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவு விவரம் | | **1ம் மனுதாரருக்கு கிடைக்க வேண்டிய இழப்பீட்டு தொகை ரூ.4,00,000/-மும், 4ம் மனுதாரருக்கு கிடைக்க வேண்டிய இழப்பீட்டு தொகை ரூ.1,00,000/-மும்** இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்றுக்கொள்ளலாம்.<br>2, 3 மனுதாரர்கள் இளவராக இருப்பதால் அவர்களது பங்களிப்பு இழப்பீட்டு தொகையான தலா ரூ.5,00,000/-த்தை ஏதாவது ஒரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் நிரந்தர வைப்பீட்டில் வைக்கவும், 2, 3 இளவர் மனுதாரர்களின் |



LATHA Digitally signed by LATHA
Date: 2026.05.04 18:27:56 +0530

| | | | |
|---|---|---|---|
| | | | பராமரிப்பிற்கு பணம் தேவைப்படும்பட்சத்தில் காலாண்டிற்கு ஒரு முறை அதற்குரிய வட்டியை இந்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து பெற்றுக்கொள்ளவும், 2, 3 இளவர் மனுதாரர்கள் உரிய வயதடைந்தவுடன் அவர்களுக்குரிய பங்களிப்பு இழப்பீட்டு தொகையை இந்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து பெற்றுகொள்ளவும் உத்தரவிடப்படுகிறது. |
| (m) | எந்த குறிப்பிட்ட காலத்திற்கு இழப்பீட்டு தொகைக்கான வட்டி கோருரிமையாளருக்கு கிடைக்கத்தக்க தல்ல என்ற விபரம் ஏதேனும் இருப்பின் | - | இல்லை. |
| (n) | இதுவரை செலுத்தப்பட்ட நீதிமன்ற கட்டணம் | - | ரூ.372.50 |
| (o) | உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து 10 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டிய மீதி நீதிமன்ற கட்டணம் | - | **ரூ.14,000/-** |
| (p) | திருப்பி வழங்கத்தக்க கூடுதல் நீதிமன்ற கட்டணம் | - | இல்லை. |

LATHA Digitally signed by LATHA Date: 2026.05.04 18:28:05 +0530

இம்மனு கடந்த 13.06.2025 ஆம் தேதியன்று திருவாரூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு 16.09.2025 அன்று M.C.O.P.No.93/2025 என்ற எண்ணில் திருவாரூர் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. பின்பு இம்மனுவானது உ.வி.மு.ச.பிரிவு 24 ன்கீழ் இந்நீதிமன்றத்திற்கு பரிந்துரைக்கப்பட்டு 17.09.2025 அன்று இந்நீதிமன்றத்தால் M.C.O.P.No.67/2025 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. பின்னர், 27.04.2026 ஆம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்குரைஞர் திரு.N.விநாயகமூர்த்தி அவர்கள் முன்னிலையாகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும் முன்னிலையாகாததால் தோன்றாதரப்பினராக அறிவிக்கப்பட்டும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் திரு.E.சதீஷ்குமார் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டுள்ள சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்ததன் அடிப்படையில் இத்தீர்ப்பாயம் வழங்கும்.

## <u>ஆணையுரை</u>

இம்மனுவானது மோட்டார் வாகன விபத்து நஷ்ட ஈடு சட்டப்பிரிவு 163(A)-இன் கீழ் 1ம் மனுதாரரின் கணவர் கலைச்செல்வன் மோட்டார் வாகன

LATHA Digitally signed by LATHA Date: 2026.05.04 18:28:11 +0530

விபத்திற்குள்ளாகி இறந்ததற்கு நஷ்ட ஈடாக ரூ.15,00,000/- தொகையையும், அத்தொகை செலுத்தும் வரை 7.5% ஆண்டு வட்டியும் 1,2 எதிர்மனுதாரர்கள் சேர்ந்தோ அல்லது தனித்தனியாகவோ கொடுக்க உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 2) <u>மனுவின் சுருக்கம்:-</u>

2.1) இவ்வழக்கின் 1ம் எதிர்மனுதாரரான நந்தினி அவருக்கு மருந்து வாங்க அவரது உறவினரான இவ்வழக்கு விபத்தில் இறந்த கலைச்செல்வனை 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான பதிவு எண் எழுதப்படாத TN-50-AP-0274 என்ற பதிவெண் கொண்ட Hero Passion Plus என்ற இருசக்கரவாகனத்தை கொடுத்து அனுப்பியபோது கலைச்செல்வன் அம்பலில் இருந்த மெடிக்கலுக்கு சென்று மருந்து வாங்கிகொண்டு கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வீட்டிற்கு வந்துகொண்டிருந்தபோது அம்பல் அரசு மேல்நிலைப்பள்ளி அருகில் திடீரென ஒருவர் குறுக்கே வந்துவிட்டதால் அவர் மீது மோதாமல் இருக்க வாகனத்தை ஒதுக்க முயற்சித்தபோது அருகில் உள்ள ஹோட்டலில் இருந்த இரும்பால் ஆன தோசைக்கல்லில் விழுந்து அடிபட்டு கீழே விழுந்தவரை பூந்தோட்டம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கொண்டுசென்றபோது கலைச்செல்வனை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கனவே

LATHA Digitally signed by LATHA Date: 2026.05.04 18:28:20 +0530

இறந்துவிட்டதாக தெரிவித்துள்ளனர். அதன்பின்னர், கலைச்செல்வன் உடல் சடலக்கூராய்வு செய்யப்பட்டு உறவினர் வசம் ஒப்படைக்கப்பட்டது.

2.2) மேற்படி விபத்தானது இறந்த கலைச்செல்வனின் கவனக்குறைவும், அஜாக்கிரதையுமே முழு காரணம் என்பதால் திருகண்ணபுரம் காவல்நிலையத்தில் குற்ற எண்.232/2024, பிரிவு 106(1) BNS ன்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

2.3) மேற்படி விபத்தை ஏற்படுத்திய வாகனம் 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது எனவும், அவ்வாகனத்திற்கு 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு காப்பீடு நிலுவையில் இருந்து வருகிறது. விபத்தில் இறந்த கலைச்செல்வன் 1ம் எதிர்மனுதாரர் அனுமதியின்பேரில் பெற்று வாகனத்தை ஓட்டிச்சென்றுள்ளார். விபத்து சமயம் கலைச்செல்வனுக்கு உரிய ஓட்டுநர் உரிமமும் இருந்து வருகிறது.

2.4) விபத்தில் இறந்த கலைச்செல்வன் விபத்தின்போது நல்ல திடகாத்திரமாகவும், ஆரோக்கியமாகவும், சுறுசுறுப்பாகவும் செயல்பட்டு ஓட்டுநராக வேலை பார்த்துவந்தபோது உடல்நிலை சரியில்லாததால் சுமார் 6 மாத காலமாக தற்காலிகமாக ரூ.3000/-சம்பாதித்து குடும்பத்தை பராமரித்து வந்துள்ளார். 1ம் மனுதாரரின் கணவர் விபத்தில் இறக்காமல் இருந்திருந்தால் 80 வயது வரை வாழ்ந்து நல்ல நிலையில் இருந்து வேலைக்கு சென்றிருப்பார் எனவும், 1ம் எதிர்மனுதாரர் தனது கணவரை இழந்து அவர்மூலம் கிடைத்து



LATHA Digitally signed by LATHA Date: 2026.05.04 18:28:26 +0530

அன்பு, பாசம், அரவணைப்பு, வருமானம், தாம்பத்தியம் ஆகியவற்றை இழந்தும், 2, 3 மனுதாரரர்கள் தங்களது தகப்பனாரை இழந்து அவர்மூலம் கிடைத்து வந்து அன்பு, பாசம், அரவணைப்பு, வருமானம் ஆகியவற்றை இழந்தும், 4 ம் மனுதாரர் தனது மகனை இழந்து அவர்மூலம் கிடைத்து வந்து அன்பு, பாசம், அரவணைப்பு, வருமானம் ஆகியவற்றை இழந்துவிட்டதாகவும், மேற்படி இழப்பானது எவ்வகையிலும் ஈடுசெய்யமுடியாத இழப்பு என்பதால் மேற்படி இழப்பை ஈடுசெய்யும் விதமாக ரூ.50,00,000/-இழப்பீட்டு தொகையை 1, 2 எதிர்மனுதாரர்கள் சேர்ந்தோ அல்லது தனித்தனியாகவோ கொடுக்க உத்தரவிடக்கோரி இந்த மனுவுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3) 2 **ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்**

(i) இந்த மனுவானது சட்டப்படியும், சங்கதிகளின்படியும் நிலைக்கத்தக்கது அல்ல. இந்த எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர ஏனையவற்றை மனுதாரர்களே நிரூபிக்கவேண்டும்.

(ii) விபத்தில் தொடர்புடைய வாகனத்தின் பதிவெண் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. இவ்விபத்தில் இறந்துபோன விபத்திற்கு முழு காரணம் என்பதால் இறந்த கலைச்செல்வனுக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு Charge abated என காவல்நிலையத்தினரால் வழக்கு முடிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில், கலைச்செல்வன் விபத்தினை

LATHA Digitally signed by LATHA Date: 2026.05.04 18:28:34 +0530

ஏற்படுத்திய Tortfeasor என்பதால் மனுதாரர்கள் இழப்பீடு கோர தகுதியுடையவர்கள் அல்ல.

(iii) விபத்து சமயம் இறந்த கலைச்செல்வன் மது அருந்திவிட்டு மது போதையில் நிலைதடுமாறி வாகனத்தை ஓட்டிவந்து அருகில் இருந்த ஹோட்டலில் இருந்த தோசைக்கல்லின் மீது மோதி தனக்கு தானே விபத்தை ஏற்படுத்திக்கொண்டுள்ளதால் இவ்விபத்திற்கு இறந்துபோன கலைச்செல்வனே பொறுப்புடையவர் ஆவார்.

(iv) விபத்தில் சம்பந்தப்பட்ட TN-50-AP-0274 என்ற வாகனம் 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது என்பதும், அது இந்த எதிர்மனுதாரர் நிறுவனத்தில் விபத்து சமயம் காப்பீடு செய்யப்பட்டு இருந்து வந்துள்ளது என்பதும் இந்த எதிர்மனுதாரரால் மறுக்கப்படுகிறது.இருப்பினும் பாலிசி எண்.39010231246200324610 இல் 3ம் மனுதாரரை பொறுத்து காப்பீடு செய்யப்படாததால் மனுதாரர்களுக்கு இந்த எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல.

(v) மேலும், விபத்தில் தொடர்புடைய TN-50-AP-0274 என்ற வாகனத்திற்கு செல்லுபடியாகும் தகுதிச்சான்றும், அவ்வாகனத்தை ஓட்டிவந்த கலைச்செல்வனுக்கு செல்லத்தக்க ஓட்டுநர் உரிமமும் இருந்து வந்துள்ளது என்பதும் இந்த எதிர்மனுதாரரால் மறுக்கப்படுகிறது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.05.04 18:28:40 +0530

(vi) விபத்தானது 26.12.2024 அன்று நடந்துள்ளது. ஆனால், இழப்பீடு கோரும் மனுவானது ஆறுமாத காலத்திற்கு பிறகு தாமதாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இம்மனு தள்ளுபடிக்குரியது ஆகும்.

(vii) மனுதாரர்கள் இறந்துபோன நபரின் வயது, வருமானம், தொழில் ஆகியவற்றை நிரூபிக்க கூடிய ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும், மனுதாரர்கள் இறந்துபோன நபரின் வாரிசுகள் என்பதும் இந்த எதிர்மனுதாரரால் மறுக்கப்படுகிறது.

(viii) மேலும், விபத்தில் இறந்தநபர் மது அருந்தியிருப்பதாக சடல கூராய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த வகையில் மோட்டார் வாகன சட்டத்தின்படி விதிமீறல்கள் உள்ளதால் மனுதாரர்கள் எவ்வித இழப்பீடு தொகையும் இந்த எதிர்மனுதாரரிடமிருந்து கோர இயலாது. ஆகவே, மேற்குறிப்பிட்டுள்ள காரணங்களின் அடிப்படையில் இம்மனுவை இந்த எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடவேண்டி இந்த எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**4) <u>மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில்:-</u>**

(1) 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN-50-AP-0274 வாகனத்தை ஓட்டிவந்து இறந்துபோன கலைச்செல்வனின் வாரிசுகளுக்கு P.A.Coverage மூலம் இழப்பீடு கிடைக்கத்தக்கதா?

LATHA Digitally signed by LATHA Date: 2026.05.04 18:28:48 +0530

5) மனுதாரர்கள் தரப்பில் **ம.சா.1** விசாரிக்கப்பட்டு, **ம.சா.ஆ.1** முதல் **ம.சா.ஆ.9** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 2 **ம் எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.1 விசாரிக்கப்பட்டு எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.3** வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) <u>**பிரச்சினை எண் 1-ற்கான தீர்வு:**</u>

**(1) 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான TN-50-AP-0274 வாகனத்தை ஓட்டிவந்து இறந்துபோன கலைச்செல்வனின் வாரிசுகளுக்கு P.A.Coverage மூலம் இழப்பீடு கிடைக்கத்தக்கதா? என்ற பிரச்சினைக்கு தீர்வு காண முற்படுகையில்,**

(i) 1ம் மனுதாரரின் கணவர் இறந்துவிட்ட கலைச்செல்வன் 1ம் எதிர்மனுதாரருக்கு மருந்து வாங்குவதற்காக 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான பதிவு எண் எழுதப்படாத TN-50-AP-0274 என்ற ஹீரோ பேஷன் ப்ளஸ் என்ற இருசக்கரவாகனத்தில் அம்பலில் இருந்த மெடிக்கலுக்கு சென்று மருந்து வாங்கிகொண்டு கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வீட்டிற்கு வந்துகொண்டிருந்தபோது அம்பல் அரசு மேல்நிலைப்பள்ளி அருகில் திடீரென ஒருவர் குறுக்கே வந்துவிட்டதால் அவர் மீது மோதாமல் இருக்க வாகனத்தை ஒதுக்க முயற்சித்தபோது அருகில் உள்ள ஹோட்டலில் இருந்த இரும்பால் ஆன தோசைக்கல்லில் விழுந்து அடிபட்டு மருத்துவனையில் சேர்க்கப்பட்டு



LATHA Digitally signed by LATHA Date: 2026.05.04 18:28:55 +0530

பின்னிட்டு இறந்துள்ளார் என்பது ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையின் மூலம் தெரியவருகிறது. அதில் விபத்திற்கு காரணமோ, எதிரியின் பெயர் விவரமோ பதிவு செய்யப்படவில்லை.

(ii) இம்மனுவானது பிரிவு 163(A) மோட்டார் வாகன சட்டத்தின்கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளநிலையில், எ.ம.சா.ஆ.3 இறுதியறிக்கை Referred as charge abated என முடிக்கப்பட்டுள்ளதால் அதனடிப்படையில் இறந்த கலைச்செல்வனின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்பதை முடிவு செய்யஇயலாது. மேலும், எ.ம.சா.ஆ.2 இறந்தவரின் சடல கூராய்வு அறிக்கையில் இரத்தத்தில் 18 mg ஆல்கஹால் இருப்பதாக குறிப்பிட்டுள்ளதால் அது மதுபோதையில் வாகனத்தை ஓட்டியதாக எடுத்துக்கொள்ளமுடியாது.

(iii) மேலும், பரிசீலனை செய்கையில், 1ம் எதிர்மனுதாரருக்கு உரிமையான வாகனத்தை இறந்த கலைச்செல்வன் ஓட்டிவந்துள்ளார் என்பது ம.சா.ஆ.5 ன்மூலம் தெரியவருகிறது. அந்த வாகனம் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பது ம.சா.ஆ.6 ன் மூலம் நிரூபணமாகிறது. அதன்படி 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் இறந்த நபர் மேற்படி வாகன உரிமையாளர் இல்லை அதனால் இந்த காப்பீடானது இறந்த நபருக்கு பொருந்தாது என வாதிடப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.05.04 18:29:07 +0530

(iv) இதுகுறித்து பரிசீலனை செய்கையில், இறந்த நபர் 1ம் எதிர்மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் அவருக்கு மருந்து வாங்க 1ம் எதிர்மனுதாரர் கேட்டுக்கொண்டதால் அவரது வாகனத்தை எடுத்து சென்றதாக 1ம் மனுதாரர் தரப்பில் சாட்சியமளிக்கப்பட்டுள்ளது. இந்நீதிமன்றத்தின் மூலம் 1ம் எதிர்மனுதாரருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டும் மனுதாரரின் வழக்கை ஆட்சேபிக்கும் வகையில் ஆஜராகவில்லை. ஆனால், 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் காப்பீட்டுதாரரான 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில்

***(i) 2024(1) TN MAC16 Manager, National Insurance Co.Ltd Vs. Pichaikannu and anothers.***

***(ii) 2025(2) TN MAC 52 Kochadai and another Vs Rajesh and anothers***

மேற்கண்ட முன்தீர்ப்புகள் சுட்டிக்காட்டப்பட்டது. ஆனால், இவ்வழக்கில் இறந்த நபர் ஆல்கஹால் எடுத்துக்கொண்டு இருந்ததாக அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. மேலும், இந்த விபத்திற்கு இறந்த நபர் தான் காரணம் என்பதை குற்ற இறுதியறிக்கையை மட்டுமே வைத்து முடிவு செய்ய இயலாது. அதேசமயம், மனுதாரர்கள் தரப்பில்

***(i) 2021(2) TN MAC 426 Divisional Manager, United India Insurance Co.Ltd Vs. C.Kumar and other***

LATHA Digitally signed by LATHA Date: 2026.05.04 18:29:13 +0530

***(ii) 2021(2) TN MAC 259 Bajaj Allianz General Insurance Co.Ltd vs Tamil Selvi and anothers***

***(iii) 2024(2) TN MAC 237 Vasantha Vs Venkatachalm வழக்கில்***

***மாண்புமிகு உயர்நீதிமன்ற முன்தீர்ப்பான பத்தி 7-இல்***

> *This court considers that the Appellants/Claimants appear to have appear a great deal of misconception in relying on clause(ii) of Section II of the terms of policy, which forms part of Ext.R1.The issue is whether the permissive user or Owner will be qualified to be termed as " Third Party" for the purpose of Section 163-Aof M.V.Act, and this had been squarely answered by the authoritative pronouncements of Supreme Court in Ramkhiladi and Ningamma Cases. And whether by contract, the Insurance company had expanded its liability to include the permissive user; which the victim of the present accident is concerned, the relevant clause makes it amply clear that this section to the injured. Therefore, what has been granted to the insured, and what kind of premium has been paid, need to be ascertained, to which, one needs to look to the policy cover, which shows that the owner is entitled to P.A.Cover for maximum amount of Rs.1,00,000/-*

மேற்கண்ட முன்தீர்ப்புகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதன்படி மோட்டார் வாகன சட்டமானது விபத்தினால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கென தக்க இழப்பீடு கிடைக்க கூடிய நலச்சட்டம் என்பதை கருத்தில்கொண்டு பரிசீலனை செய்கையில், 1ம் எதிர்மனுதாரருக்கு மருந்து வாங்குவதற்காகவே இறந்த கலைச்செல்வன் 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான வாகனத்தை உரிமையாளரால் அனுமதிக்கப்பட்டதன்பேரிலேயே வாகனத்தை எடுத்துக்சென்றுள்ளதால் அனுமதிக்கப்பட்ட ஓட்டுநர் என்ற வகையிலும், ம.சா.ஆ.6 காப்பீட்டு பாலிசி விபத்தின்போது அமலில் உள்ளதாலும் P.A.Coverage ன்படி இறந்த நபருக்கு இழப்பீடாக ரூ.15,00,000/-

LATHA Digitally signed by LATHA Date: 2026.05.04 18:29:19 +0530

மனுதாரர்களுக்கு கிடைக்கத்தக்கது என பிரச்சினை எண்.1 ற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

7) முடிவாக, இந்த மனு செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

**1)** 1ம் மனுதாரருக்கு **ரூ.4,00,000/-மும், 2, 3 இளவர் மனுதாரர்களுக்கு தலா ரூ.5,00,000/-மும், 4ம் மனுதாரருக்கு ரூ.1,00,000/-மும்** பெற்றுகொள்ளவேண்டியது.

2) மேற்படி இழப்பீட்டு தொகையான **ரூ.15,00,000/- ஐ 2ம் எதிர்மனுதாரர்** இந்த மனு தாக்கலான தேதியிலிருந்து முழு தொகை வசூலாகும் வரைக்கும் 7.5% வட்டியுடன் (மனு தரப்பினரின் தள்ளுபடி செய்யப்பட்ட காலம் இருப்பின் அதை தவிர்த்து) செலவுத்தொகையுடன் இந்நீதிமன்ற இத்தீர்ப்பாயத்தின் வங்கிக் கணக்கு எண்ணான ஸ்டேட் பேங்க ஆப் இந்தியா, விளமல் கிளை, திருவாரூர் **கணக்கு எண்.CJMTVR672025NIC**, IFSC. SBIN0004266 – என்ற வங்கி கணக்கில் இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்ட ஒரு மாத காலத்திற்குள் செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

3) மேற்படி இழப்பீட்டுத் தொகை வைப்பீடு செய்யப்படும்பட்சத்தில் மேற்கண்ட வகையில், 1 ஆம் மனுதாரருக்கு கிடைக்க வேண்டிய இழப்பீட்டுத் தொகை **ரூ.4,00,000/-மும், 4ம்** மனுதாரர் **ரூ.1,00,000/-மும்** அதற்குரிய வட்டி மற்றும் செலவுத்தொகையுடன் இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து பெற்றுக்கொள்ளலாம் என்றும் உத்தரவிடப்படுகிறது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.05.04 18:29:27 +0530

4) 2, 3 மனுதாரர்கள் இளவர்களாக இருப்பதால் அவர்களது பங்களிப்பு இழப்பீட்டு தொகையான தலா ரூ.5,00,000/-த்தை ஏதாவது ஒரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் நிரந்தர வைப்பீட்டில் வைக்கவும், 2, 3 இளவர் மனுதாரர்களின் பராமரிப்பிற்கு பணம் தேவைப்படும்பட்சத்தில் காலாண்டிற்கு ஒரு முறை அதற்குரிய வட்டியை இந்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து பெற்றுக்கொள்ளவும், 2, 3 இளவர் மனுதாரர்கள் உரிய வயதடைந்தவுடன் அவர்களுக்குரிய பங்களிப்பு இழப்பீட்டு தொகையை இந்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து பெற்றுகொள்ளவும் உத்தரவிடப்படுகிறது.

5) மேலும், மனுதாரர்கள் மீதி நீதிமன்ற கட்டணம் செலுத்த வேண்டி இருந்தால் 10 நாட்களுக்குள் செலுத்த வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது. மேலும், நீதிமன்றத்தில் வைப்பீடு செய்த தீர்ப்பாணை தொகையை மனுதாரர்கள் மீதி நீதிமன்ற கட்டணம் செலுத்தும் வரையில் மனுதாரர்கள் பெறத்தக்கவரல்ல என்றும் உத்தரவிடப்படுகிறது.

6) மனுதாரர்களின் வழக்கறிஞர் கட்டணம் **ரூ.22,000/-** என நிர்ணயம் செய்யப்படுகிறது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.05.04 18:29:34 +0530

**(மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற முன்தீர்ப்பான Cholamanadalam MS Genl. Insurane Co.Ltd. Vs. Mr.S.Ayyanar and others TR.CMP No.264 to 281 of 2020 Dt:11.05.2020-இன்படி இந்த தீர்ப்புரையிலேயே தீர்ப்பாணைக்கான அனைத்து விவரங்களும் கொடுக்கப்படுவதால் தனியாக தீர்ப்பாணை தயார் செய்யப்படுவதில்லை.)**

இவ்வுதரவானது சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு மே திங்கள் 04-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

LATHA Digitally signed by LATHA Date: 2026.05.04 18:29:40 +0530

மோ.வா.வி.கோ.தீர்ப்பாய நீதிபதி,
தலைமை நீதித்துறை நடுவர்
திருவாரூர் .

**I. <u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி-</u>**

ம.சா.1 - திருமதி.சுதா

**II. <u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:-</u>**

ம.சா.ஆ.1 –27.12.2024 தேதியிட்ட திருகண்ணபுரம் காவல்நிலைய முதல் தகவல் அறிக்கை எண்.23/2024 உண்மை நகல்

ம..சா.ஆ.2 – இறந்த கலைச்செல்வனின் சடலக்கூராய்வு அறிக்கை உண்மை நகல்

LATHA Digitally signed by LATHA Date: 2026.05.04 18:29:46 +0530

ம..சா.ஆ.3 – 23.01.2025 தேதியிட்ட இறந்த கலைச்செல்வனின் இறப்பு சான்றிதழ் உண்மை நகல்

ம..சா.ஆ.4 – 02.04.2025 தேதியிட்ட இறந்த கலைச்செல்வனின் வாரிசு சான்றிதழ் நகல்

ம..சா.ஆ.5 – 26.12.2024 தேதியிட்ட TN-50-AP-0274 மோட்டார்சைக்கிளின் ஆர்சிபுத்தகம் உண்மை நகல்

ம..சா.ஆ.6 –15.11.2024 தேதியிட்ட TN-50-AP-0274 பதிவெண் கொண்ட மோட்டார் சைக்கிளின் காப்பீடு பாலிசி உண்மை நகல்

ம.சா.ஆ.7 – 23.01.2008 ம் தேதி வழங்கப்பட்ட விபத்தில் இறந்த கலைச்செல்வனின் ஓட்டுநர் உரிமம் நகல்

ம..சா.ஆ.8 -1 முதல் 4 மனுதாரர்களின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல்

ம.சா.ஆ.9 – 1ம் மனுதாரரின் வங்கி பாஸ்புத்தகம் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல்

III. 2 ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் -

எ.ம.சா.1 – திரு.M.R.ரமேஷ்

LATHA Digitally signed by LATHA Date: 2026.05.04 18:29:53 +0530

**IV. 2 ம் எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் -**

எ.ம.சா.ஆ.1 - 15.11.2024 தேதியிட்ட காப்பீட்டு சான்று நகல்

எ.ம.சா.ஆ.2 – 18.03.2025 தேதியிட்ட விபத்தில் இறந்த கலைச்செல்வனின் Viscera Report நகல்

எ.ம.சா.ஆ.3 – 27.12.2024 தேதியிட்ட குற்ற இறுதியறிக்கை கணிணி நகல்

LATHA Digitally signed by LATHA Date: 2026.05.04 18:29:59 +0530

மோ.வா.வி.கோ.தீர்ப்பாய நீதிபதி,

தலைமை நீதித்துறை நடுவர்

திருவாரூர்